**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி**

2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18 ஆம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.03/2022 இன் இ.ம.எண்.02/2021 இன் அ.வ.எண்.405/2018**

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், மார்ச்சநாயக்கன்பாளையம் கிராமம், காளியப்பகவுண்டன்புதூர், கதவு எண்.17–ல் வசிக்கும் திரு.முத்துகிருஷ்ணகோபால்சாமி மனைவி சுமார் 80 வயதுடைய திருமதி.கனகசாந்தம் அவரின் பொது அதிகார முகவர் கோவை மாவட்டம், ஆனைமலை வட்டம், காளியப்பகவுண்டன்புதூரில் வசிக்கும் திரு.K.M.பொன்னுசாமி கவுண்டர் மகன் சுமார் 56 வயதுடைய திரு.K.P.காளீஸ்வரன் ... மனுதாரர்/அவசிய கட்சிகாரர்

/ எதிர் /

1) பூஞ்சோலை எஜிகேசனல் டிரஸ்ட் அதற்காக அதன் நிர்வாக செயலாளர் பொள்ளாச்சி வட்டம், தற்போது ஆனைமலை வட்டம், காளியப்பகவுண்டன்புதூர் கிராமத்தில் வசித்து வரும் திரு.சுப்பிரமணியம் மகன் திரு.க.சு.நாகராசன்.

2) வட்டாட்சியர், கோவை ரோட்டில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம், பொள்ளாச்சி.

3) தமிழ்நாடு அரசு அதற்காக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர், கோவை.

... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

மனுதாரர்/உத்தேச தரப்பினர் சார்பாக அவரது அதிகார முகவர் வழக்கை நடத்த அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை III விதி 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 07.09.2022.

இம்மனுவானது கடந்த 05.12.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.ராம அருளரசன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சு.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.தேவசேனாதிபதி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**<u>இறுதி உத்தரவு</u>**

| |
|---|
| முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு 2ம் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் என்ற தகுதியின் கீழ் 2ம் பிரதிவாதி சார்பாக மனுதாரரை வழக்கை நடத்த அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. |

இவ்வுத்தரவு 2023ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

---

**<u>இறுதிநிலை உத்தரவு</u>**
இ.ம.எண்.03/2022 இன் ஓ.எஸ்.405/2018
நாள் : 18.12.2023
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---